# இலங்கையில் 'ரா'வின் சூழ்ச்சிகள்

## புதிய தகவல்கள்

வடக்கு மாகாணத்திலுள்ள தமிழர்களை எல்லாம் வவுனியாவுக்கு குடிபெயர வைத்து, பின்னர் புலிகளை வேட்டையாடப் போவதாக அறிவிக்கிறார் ரஞ்சன் விஜயரத்னா. வெளிப்படையாக சிங்கள ராணுவம் இனப்படுகொலையை நடத்திக் கொண்டிருக்கிறது. இருப்பினும் 'அமைதிப் படை'யின் அக்கிரமங்களை புலிகளும், ஈழமக்களும் எதிர்த்தார்கள் என்ற ஒரே காரணத்திற்காக தற்போது நடைபெறும் இனப்படுகொலையை கண்டித்து அறிக்கை விடுவதற்குக் கூட மறுக்கிறது. இந்திய அரசு. இலங்கைப் போராளிகளுக்கு ஆயுதமும் பயிற்சியும் அளித்ததும், ராணுவத்தை அனுப்பியதும், ஒப்பந்தம் போட்டதும் தனது தெற்காசிய பிராந்திய ஆதிக்க நோக்கத்திற்காகத் தானேயன்றி போராடும் தமிழினத்தின் மீது உள்ள அனுதாபத்தினால் அல்ல என்பதை இந்திய அரசு நிரூபித்து வருகிறது.

இத்தகைய சூழ்நிலையில் புலிகள் இயக்கத் தலைவர்கள் கிட்டுவும், பாலசிங்கமும் இந்தியா ராஜதந்திர ரீதியாகத் தலையிட வேண்டும் என்றும், இலங்கை அரசு விரும்பினாலும் விரும்பா விட்டாலும் இலங்கையின் நடப்புகள் இந்தியாவுக்கு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தவை என்றும் பேசியுள்ளனர். இலங்கை விவகாரத்தில் மற்ற நாடுகளுக்கு இல்லாத உரிமை இந்தியாவுக்கு உண்டென்றும் ஒருவேளை இந்தியா அவ்வாறு தலையிடவில்லையெனில் மற்ற நாடுகள் (பாகிஸ்தான்) தலையிடக்கூடும் என்றும் 'எச்சரிக்கை' செய்கிறார் கிட்டு.

இதை புலிகளின் ராஜ தந்திரம் என்று மெச்சிக் கொள்வதற்கு தமிழகத்தில் பலர் இருக்கலாம். ஆனால் இந்திய இலங்கை ஒப்பந்தம் திணிக்கப்பட்ட போது யாழ்ப்பாணத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசிய பிரபாகரன் இது தமிழர்களைக் காப்பதற்காக அல்ல; இந்தியாவின் விஸ்திரிப்பு நோக்கத்திற்காக போடப்பட்ட ஒப்பந்தம் என்று மறைமுகமாகச் சாடினார். அதன்பின் மாத்தையா, யோகி ஆகிய அனைவரும் வெளிப்படையாக இந்திய அரசின் பிராந்திய மேலாதிக்க நோக்கத்தை அம்பலமாக்கினார்; எதிர்த்தனர்.

இப்போது இந்தியாவின் பிராந்திய ஆதிக்க உரிமையை அவர்கள் இந்திய அரசுக்கு நினைவுபடுத்துகின்றனர். '83 முதல் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு இந்தியா அளித்து வந்த 'தார்மீக ஆதரவின்' உள்நோக்கங்களை நாம் தொடர்ந்து அம்பலப்படுத்தி வந்திருக்கிறோம். அவற்றை உறுதி செய்யும் விதத்தில் சமீபத்தில் ஒரு நூல் வெளிவந்துள்ளது.

'இந்தியாவின் இலங்கைத் தோல்வி' (India's Srilanka Fiasco) என்ற இந்நூலை எழுதியவர் ராஜேஷ் கடியன் என்ற அமெரிக்காவில் குடியேறிய இந்திய மருத்துவர். ஏற்கனவே இந்திய ராணுவம் பற்றி ஒரு நூலை எழுதியுள்ள இவர், இந்திய ஆளும் வர்க்கத்தின் பிராந்திய ஆதிக்கத்தை ஆதரிப்பவர். தன்னுடைய கண்ணோட்டத்திலிருந்து ராஜதந்திர ரீதியாகவும், உளவுத்துறை வாயிலாகவும், ராணுவ ரீதியாகவும் இலங்கை விவகாரத்தில் இந்தியா செய்த தலையீடுகளை இவர் தொகுக்கிறார். குறைபாடுகளை விமர்சிக்கிறார்.

எனினும், இலங்கைத் தமிழர்களை பகடைக்காயாகப் பயன்படுத்திக் கொண்ட இந்திய அரசின் முகத்திரையைக் கிழிக்க உதவும் என்பதாலும், இந்தியாவின் 'அப்பாவித்தனத்தை'ச் சாடும் சோ, தினமலர், எக்ஸ்பிரஸ் போன்ற பார்ப்பன ஏடுகளுக்கும் பதிலடி கொடுக்கும் என்பதாலும், இறுதியாக ராஜதந்திரம் என்ற பெயரிலான புலிகளின் சந்தர்ப்பவாதத்தை வெளிச்சம் போட்டுக் காட்டும் என்பதாலும் இந்நூலின் சில பகுதிகளை மட்டும் சுருக்கி மொழியாக்கம் செய்து தருகிறோம்:

★ தமிழ்ப் போராளிகளின் பயிற்சித் தளங்கள் இந்தியாவில் (இருக்கின்றன என்பது) 1984 வாக்கில் பகிரங்க ரகசியமாகிவிட்டது. ஆரவமற்ற, காவலற்ற ராமநாதபுரம் கடற்கரைப் பகுதி பிரதான பயிற்சிக்களமாக இருந்தது. பிரதமரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்த 'ரா' (RAW - ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு மையம்) எனும் உளவு நிறுவனம் எல்லாப் போராளி அமைப்புகளையும் தனது மேற்பார்வையின் கீழ் இயக்கியது.

ரகசிய, உளவு வேலைகளைச் செய்வதற்கு பிரதமர் அலுவலகத்தின் கீழ் வேறு பல நிறுவனங்களும் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, விமானவியல் ஆய்வு மையம், (Aviation Reasearch Centre), மின்னணுவியல் தொழில்நுட்பப் பிரிவு (Electronic Technical Section) ஆகியவை ராணுவ ஒலிபரப்புகளை ஒட்டுக் கேட்பதற்காகவும், எதிரி விமானங்களை கண்காணிப்பதற்காகவும், ரகசியக் குறியீட்டுச் செய்திகளை 'மொழி பெயர்ப்பு' செய்வதற்காகவும் உருவாக்கப்பட்டவை.

சிறப்புச் சேவைப் பணியகம், (Special Services Bureau) சிறப்புப் பாதுகாப்புப் படை (Special Security Force) ஆகியவையும் பிரதமர் அலுவலகத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருப்பவை; 'ரா'வின் கட்டுப்பாட்டில் இயங்குபவை. சிறப்புப் பாதுகாப்புப்படை 1962 இந்திய-சீன யுத்தத்திற்குப்பின் உருவாக்கப்பட்டது; எல்லைப் பகுதியை எதிரி ஆக்கிரமித்து விட்டால் எதிரியை எதிர்த்துப்போராட எல்லைப் பகுதி
மக்களை பயிற்றுவிப்பதே இதன் நோ
போர்க்களத்தில் ரகசிய வேலைகளை
வதற்கு உருவாக்கப்பட்டது தான் சி
பாதுகாப்புப் படை. இந்த அமை
அனைத்தும் 1970களின் இறுதியில்
இலங்கை விவகாரங்களைக் கவ
தொடங்கிவிட்டன.

★ 'ரா' மற்றும் அதன் துணை
நிறுவனங்களின் ஆரம்பகால நடவடி
ளைப் பற்றிய விவரங்களை தமிழ்
லைப் புலிகள் அமைப்பின்
டொன்றே பின்வருமாறு விளக்குகி

''தமிழ்ப் போராளிகளுக்கு ரா
பயிற்சியளிக்கும் பணியை மறைந்த
இந்திராகாந்தி 'ரா'விடம் ஒப்பை
தமிழகத்தில் பணியாற்றிக் கொ
'ரா' அதிகாரிகளான திரு. சாமி, தி
மேனன் ஆகியோர் தங்களது நண்ப
திரகாசனைத் (இலங்கை தமிழர் த
செல்வநாயகத்தின் மகன்) தொடர்பு
டனர். தமிழ் இளைஞர்களுக்கு
அரசு ராணுவப் பயிற்சி கொடுக்க இ
கவும், எந்தெந்தக் குழுக்களுக்கு ப
லாமென்று சிபாரிசு செய்யுமாறும்
பர் '83 இல் அவர்கள் சந்திரகா
கோரினர்.

சிறீ சபாரத்தினத்தின் தலைமை
'டெலோ'வை வளர்க்கலாம் என்
காசன் முடிவு செய்தார். அ
டெலோ ஒரு அமைப்பாகவே
ஆறு பேர் அடங்கிய சிறு குழு
இருந்தது. அவர்களும் தமிழ் நா
இருந்தனர். டெலோவுக்கு எந்த
அரசியல் சித்தாந்தக் கண்ணோட்ட
லாமல் இருந்தபடியால், தங்களுடை
திட்டங்களுக்கு ஏற்ப அவர்களை
வாக்க முடியும் என்ற நம்பிக்கை
ஆயுதப் பயிற்சிக்கு டெலோவை
செய்தது.

'83 ஜூலை படுகொலை ஈழ
களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி
னையில் சுதந்திரத் தீயை மூட்டி
புரட்சிகரமான சூழ்நிலையைப் ப
திக் கொண்டு டெலோ, உறுப்பின
சேர்க்கத் தொடங்கியது. எந்தவித
களோ, ஒழுக்க நெறிமுறைகளோ
மல் கும்பல் சேர்க்கப்பட்டது. த
எனும் லட்சியத்தில் எவ்விதப் பி
விரும்பத்தகாத, சமூகவிரோத சக்தி
ளமானோர் சேர்ந்தனர். இதற்
ஈ.பி.ஆர்.எல்.எஃப் மற்றும் ஈரோ
னரும் சந்திரகாசனைச் சந்தித்து
பயிற்சியில் தங்களையும் சேர்த்து
ளுமாறு வேண்டினர், அவர்களும்
கொள்ளப்பட்டனர்.

ஒரு குறிப்பிட்ட அளவுக்கு ப
வதாகக் கூறி இந்திய அரசு நம்
கள்) அணுகிய போது நாம் ஏற்று
டோம்...

தமிழகத்திற்கான 'ரா'வின் பெ
காரி திரு. உன்னிகிருஷ்ணன் தா
தமிழ்ப் போராளிக் குழுவினரின்
கைகளை ஒருங்கிணைக்கும் பொ
இருந்தார். ஆனால் போராளிகளு
படும் பயிற்சியின் தன்மை, அவ
தரப்படும் ஆயுதங்கள் பற்றிய

மிக முக்கியமான தகவல்களை அரசுக்குத் தெரிவித்துக் கொண்டி உன்னிகிருஷ்ணன். ஒவ்வொரு ள வலிமை, அவர்களது போர்த் தந்தி திட்டங்கள் ஆகியவையும் கூட அரசுக்கு சிறிது சிறிதாகத் தரப்பட் மாதங்களுக்கு முன்னர்தான் உன் ஷ்ணன் ஒரு சி.ஐ.ஏ. ஏஜெண்ட் என் இந்திய அரசு கண்டுபிடித்து விசார ன்றி ஆயுள் தண்டனை வழங்கியுள்

டெலோவுக்கு 'ரா' முதல் முக்கி ம் கொடுத்து பயீற்றுவித்தது தற்செ நிகழ்ந்ததல்ல என்பதை அமெரிக்க வார ஏடு உறுதி செய்கிறது:


டளவு மற்றும் சீர்குலைவு வேலைக பயிற்றுவிப்பதற்காக டெலோ ஆட் இந்தியாவிற்குக் கொண்டு வந்தது இந் அரசு. 'அரசியல் தெளிவற்ற நபர்க கிரிமினல் பேர்வழிகளும் டெலோ ரம்பியிருந்தனர். எந்தவிதமான சித் ம் இலக்கும் இல்லாத டெலோதான் பொருத்தமான கூலிப்படை' என் லங்கை விவகாரங்களில் நெருக்க தொடர்பு கொண்டிருந்த ஒரு இந்திய அதிகாரி.'' (டைம், ஏப்ரல்-3, 1989)

ண்டபம், கும்பகோணம் மற்றும் மகு டினம் கடற்கரை அருகில் - என பெரிய முகாம்களில் இக்கூலிப்படை விக்கப்பட்டது. சென்னை சர்வதேச நிலையத்தருகே பரங்கி மலையி அண்ணாநகரிலும் சிறிய முகாம்கள் கப்பட்டு பயிற்சி தரப்பட்டது.

தே நேரத்தில் எல்.டி.டி.ஈ., ஈரோஸ், போன்ற மற்ற குழுக்களும் வளரத் ன.

ப்பிட்ட அளவு தேர்ச்சி அடைந்த இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலு பார்தர ராணுவப் பயிற்சி நிலையங் கொரில்லா போராளிகள் அனுப்பப் எடுத்துக்காட்டாக, உத்தரப் பிர இமயமலை அடிவாரத்தில் உள்ள காமுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட சில கள் அனுப்பப்பட்டனர். மிகவும் இருக்க வேண்டும் என்பதற்காக யிலேயே உள்ள ''நிறுவனம்-22'' களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தும் ல் அமைக்கப்பட்டதுதான் ''நிறு '' என்பது குறிப்பிடத்தக்கது. ஆட் கவிழ்ப்பதற்கான சதிகாரர்களை ves) உருவாக்குவதற்காக சிறப்பாக அமைக்கப்பட்ட நிறுவ என்பதால், தமிழ்ப் போராளிக ற்றுவிக்கவும் இது பொருத்தமான இருந்தது.

போல மத்திய இந்தியாவில் ண ராணுவப் பயிற்சிக் கூடங்க களுக்குக் காலாட்படை பயிற்சி ட்டது. இன்னும் பீரங்கி, எந்திரத் கள், கைத்துப்பாக்கி, ராக்கெட் டுகள், கண்ணி வெடிகள், தகவல் வரைபடம் பயிற்சி, கொரில்லா றைகள், போர்க்களத் தந்திரங்கள் னைத்திலும் இவர்கள் பயிற்றுவிக் ர்.



'ரா'வினால் கைகழுவப்பட்ட கைக்கூலிகள் - ஒரிசா அகதி முகாம்

பயிற்சி பெற்றவர்களில் 600 பேர் 'டெலோ'வைச் சேர்ந்தவர்கள். காரணம் முன்னர் குறிப்பிட்டது தான். இவர்களுக்கு மட்டும் ஓராண்டு பயிற்சி. மற்ற குழுவினர் 50 முதல் 100 பேர் வரைதான் பயிற்றுவிக்கப் பட்டனர். அவர்களுடைய பயிற்சிக்காலம் நான்கு முதல் ஆறு மாதங்கள். இவ்வாறு பயிற்றுவிக்கப் பட்டவர்களில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இரண்டு முக்கியத் தலைவர்களும் அடக்கம். ஏற்கனவே பாலஸ்தீன விடுதலை அமைப்பின் பயிற்சி பெற்றிருந்த கிட்டுவும், மாத்தையாவும் அதற்கு அடுத்த கட்ட பயிற்சிகளை போபாலிலும் இந்தூரிலும் பெற்றனர்.

★ 1985 வாக்கில் விடுதலைப் புலிகள் ராணுவப் பயிற்சிக்கு இந்திய அரசை மட்டும் சார்ந்திராமல் போனதற்கும் காரணம் உண்டு. உலகெங்கும் பல்வேறு நாடுகளில் குடியேறிய தமிழர்களிடமிருந்தும், தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரிடமிருந்தும் டெலோ, பிளாட் போன்ற இயக்கங்கள் நிதியுதவி பெற்று வந்ததை நிறுத்தி அவையனைத்தையும் விடுதலைப் புலிகள் தங்களுக்குக் கிடைக்குமாறு செய்துக் கொண்டனர்.

சாராய உரிமம் வழங்கும் அதிகாரத்தின் மூலம் எம்.ஜி.ஆரிடம் தாராளமான பணம் குவிந்ததாகச் சொல்லப்படுகிறது. அவரது பணப்பெட்டி நிரம்பி வழிந்தது. மதராஸ் ரெஜிமெண்டின் காலாட்படைப் பிரிவு அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் மகாதேவன் எம்.ஜி.ஆரின் அதிகாரபூர்வ ராணுவ ஆலோசகரைப் போலச் செயல்பட்டார்.

தென்ஆற்காடு, திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ராணுவ சிப்பாய்களை தங்கள் பயிற்சியாளர்களாக விடுதலைப் புலிகள் சம்பளம் கொடுத்து அமர்த்திக் கொண்டனர். இவ்வாறு அமர்த்திக் கொள்ளப்பட்ட பயிற்சியாளர்கள் மதராஸ் ரெஜிமெண்ட் மற்றும் மதராஸ் எஞ்சினியரிங் குழுவைச் சேர்ந்த சிப்பாய்கள். இவையன்றி இலங்கையிலேயும் புலிகள் பயிற்சி எடுத்தனர்.

1985இலேயே சென்னை கடத்தல் பொருள் சந்தையான சைனா பஜாரிலும் போராளிகளின் செல்வாக்கு வெளிப்படத் தொடங்கியது. கடத்தல் பொருட்களும் அவற்றின் ரகங்களும் அதிகரித்தன. கடத்தல் பொருள் விற்பனையில் போராளிகளிடையே ஏற்பட்ட போட்டியினால் வெளிநாட்டு மின்னணுச் சாதனங்களின் விலைகள் வீழ்ந்தன... போதைமருந்து கடத்தலும் வளர்ந்தது. துவக்க காலத்தில் இதில் அதிகமாக ஈடுபட்டவர்கள் பிளாட் அமைப்பினர் தான்.

பிறகு தமிழக போலீசின் 'க்யூ' [Q] பிரிவு உளவுத்துறை, போராளிகளை வேவு பார்க்கத் தொடங்கியது. நக்சல்பாரிகளின் பயங்கரத்தைக் கட்டுப்படுத்த உருவாக்கப்பட்ட இந்த 'க்யூ' பிரிவு இப்போது இறக்குமதி செய்யப்பட்ட இந்த போராளிகளை கட்டுப்படுத்தும் வேலையில் இறங்கியது. ரகசியமான துரிதமான, கடுமையான நடவடிக்கை மூலம் இந்த உளவுப்பிரிவு அவர்களைத் தங்களது தொடர்பிலும், கட்டுப்பாட்டிலும் வைத்துக் கொண்டது. செப்டம்பர் '88இல் எல்.டி.டி.ஈ. உறுப்பினர்களை சென்னையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வெளியேற்றுவதில் 'க்யூ' பிரிவு பெரும் பங்காற்றியது.

★ பெரும்பான்மையான போராளிகளின் ஆயுதப் பயிற்சியை ஒழுங்கு செய்த போதும், போராளிகளை மேற்பார்வையிடுவதிலும் நிர்வகிப்பதிலும் 'ரா' மெத்தனமாக இருந்து விட்டது. ஆயுதப் பயிற்சி அளிக்கப்பட்ட பல போராளிகளை புகைப்படமெடுக்கவும், அவர்களைப் பற்றிய விவரங்களைச் சேகரித்து வைக்கவும் தவறிவிட்டது.

அதே போல இந்தியாவின் எதிர் உளவும் [Counter - Intelligence] மிக மோசமாக இருந்தது. ''என்னுடைய எசமான் சிங்கள அரசுக்கும் சேவை செய்கிறார்'' என்று 'ரா' அதிகாரி உன்னிகிருஷ்ணனின் கார் டிரைவர் இலங்கை அரசு அதிகாரி ஒருவரிடம் (இவர் தமிழர்) கூறினாராம். இது நடந்

தது உன்னிகிருஷ்ணன் சி.ஐ.ஏ. ஏஜெண்டு என்று கண்டுபிடிக்கப்படுவதற்கு ஒரு ஆண்டு முன்பு என்பது குறிப்பிடத்தக்கது... ஆனால் இத்தனைக்குப் பிறகும் டெலோவை ஒழித்துக் கட்டிய எல்.டி.டி.ஈ. — டெலோ மோதலை தோற்றுவிப்பதில் உன்னிகிருஷ்ணனின் பாத்திரம் என்ன என் பதை 'ரா' பரிசீலிக்கவில்லை.

★ இலங்கையில், இந்திய உளவாளி கள் சிலர் இருந்தனர். யாழ்ப்பாணம், மட்டக் களப்பு, திரிகோணமலை போன்ற தமிழர் அதிகம் வாழும் நகரங்களுக்கு மத்திய ரிசர்வ் போலீஸ் படையைச் சேர்ந்த போலீ சார் சிலர் உளவாளிகளாக அனுப்பப்பட்ட னர். இவர்களை எல்லா போராளிக் குழுக்க ளும் தெரிந்து வைத்திருந்தனர். சொல்லப் போனால் இவர்களது உணவு, தங்குமிடம், பாதுகாப்பு மற்றும் பிற தேவைகளை அந் தந்த ஊர்களில் இருந்த செல்வாக்கு மிக்க குழுதான் கவனித்துக் கொண்டது. நம்பத் தக்க செய்திகள் எதையும் இவர்கள் சுய முயற்சியின் மூலம் திரட்டவில்லை. மாறாக இந்திய பத்திரிகையாளர்கள் தங்கள் புல னாய்வு மூலம் திரட்டிய ரகசியச் செய்தி களை கேட்டு வாங்கினர். இவர்கள் வெறும் போலீஸ்காரர்கள் தான் என்பதால் போரா ளிகளின் - குறிப்பாக பயிற்சியும், செயலூக் கமும் நிறைந்த புலிகளின் - ராணுவ வல்ல மையை மதிப்பிடத் தெரியவில்லை.

ஜூலை '86 இறுதியில் இந்திய இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தாகும் போது இதுதான் நிலைமை.

ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு வெகு நாள் முன்னரே ஏப்ரல் '87இலேயே இலங் கையில் தலையிடுவதென இந்திய மத்திய அமைச்சகம் முடிவு செய்துவிட்டது. இதற்கு ஒரு மாதத்திற்குப் பிறகுதான் ராணுவம் இந்த முடிவில் ஈடுபடுத்தப்பட்டது.

வெளியுறவுத்துறை ராஜாங்க அமைச் சர் நட்வர்சிங் தலைமையில் ஒரு அதிகாரபூர் வமற்ற, தற்காலிகமான கருக்குழு [Core Group] டெல்லியில் உருவாக்கப்பட்டது. முப்படைத் தளபதிகள், மத்திய அமைச்சகச் செயலாளர், பாதுகாப்புத் துறைச் செயலா ளர், வெளியுறவுத் துறை செயலாளர், பிரத மர் அலுவலகத்தைச் சேர்ந்த சிலர், உளவுத் துறை [Intelligence Bureau] மற்றும் 'ரா' நபர்கள் இதில் அடங்குவர்.

இந்தக் குழு அநேகமாக அன்றாடம் கூடியது. முப்படைத் தளபதிக்குப் பதில் துணைத் தளபதி பல கூட்டங்களில் கலந்து கொண்டார். பிற அமைச்சர்களும், அதிகாரி களும் தேவைக்கேற்ப அழைக்கப்பட்டனர். இந்தக் கருக்குழு சில மாற்றங்களுடன் பிறகு அதிகார பூர்வமானதாக்கப்பட்டது.

இக்கருக்குழுவின் முடிவுகளை விரி வாகத் திட்டமிடும்படி பல்வேறு இயக்கங்க ளும் பணிக்கப்பட்டன. ராணுவத்திற்கான பணி என்ன என்று முடிவு மாறிக் கொண்டே யிருந்ததால் ஜூன் மாதம் முழுவதும் ஓரே பரபரப்பிலும் போதாக்குறைக்கு தரைப்ப டையின் கட்டுப்பாட்டில் இயங்க மாட்டோ மென விமானப்படையும், கடற்படையும் மறுத்தன. ஜூன் 17ம் தேதி வாக்கில் இரண்டு தெளிவான வாய்ப்புகளை கணக் கில் கொண்டு திட்டங்கள் வகுக்கப்பட்டன.

1) இலங்கையின் வடகிழக்குப் பகுதி யில் சிங்களர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையே இந்திய ராணுவத்தை நிறுத்துவது.



தோற்றுப் போன சதித்திட்டம்: 'அமைதிப்படை' வாபஸ்

2) ஆலோசனை செய்யப்பட்டு வந்த இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ஜெயவர்த் தனே ஏற்றுக் கொண்டு அதன் விளைவாக உள்நாட்டில் எதிர்ப்பும், ஆட்சிக்கவிழ்ப்பு அபாயமும் தோன்றினால் அவற்றிலிருந்து ஜெயவர்த்தனேவைப் பாதுகாப்பது.

முப்படைகளையும் . பயன்படுத்தி கொழும்பு நகரின் கேந்திர முக்கியத்துவமும் வாய்ந்த இடங்களையும், இந்திய ஹை-கமிஷன் அலுவலகத்தையும் பாதுகாப்பது, இலங்கை அமைச்சர் மற்றும் இலங்கை முப்ப டைத் தலைமை தளபதி ஆகியோரைக் கைது செய்வது - விமானப்படை, கடற்படைத் தள பதி ஆகியோரைக் கைது செய்யாமல் அவர் களை இந்திய போர்க்கப்பல் ஒன்றிற்குக் கொண்டுவந்து தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றும் ஒப்பந்தம் ஒன்றில் அவர்களைக் கையெழுத்திடச் செய் வது.

— இப்படியொரு திட்டமும் இருந்த தாக இலங்கை அரசின் மூத்த தமிழ் அதிகாரி கள் கூறுகின்றனர்.

(தொடரும்)



பம்பாய் நகரின் மையப் பகு யில் உள்ள அந்த மருத்துவமனையி காலை 11 மணிக்கு புறநோயாளிகள் பகு யில் ஏக நெரிசல். சுமார் 200க்கும் மேற்பட்ட நோயாளிகள் வரிசையில் காத்துக் கிடக் றார்கள். மருத்துவமனையின் அமைதியை கிழிக்கிறது துப்பாக்கி வேட்டுச் சத்தம். எ னவென்று ஓடிச்சென்று பார்ப்பதற்கு கொலையாளிகள் இருவர் படியிறங்கி ஓ மறைகின்றனர். மருத்துவமனை வராந் வில் 25 வயது இளைஞனின் பிணம் - நெ றியில் வரிசையாக துளைத்துச் சென்றிரு கும் 3 துப்பாக்கித் தோட்டாக்கள்.

அதே நாளில் பம்பாய் - தாதர் பகு காலை 12.45 மணி. தாதர் தொலைபே கத்தின் வாயிலில் உள்ள பெட்டிக் கடை யொன்றில் சிகரெட் வாங்கிக் கொண்டிரு கும் இளைஞனின் தோள் மீது கைபோட் அணைத்தபுடியே அழைத்துச் செல்கிறா ஒருவன். இருவரும் அருகில் புதிதாகக் க டப்பட்டுக் கொண்டிருக்கும் கட்டிடம் ஒன் னுள் நுழைகிறார்கள். சில நொடிகளில் வ சையாகத் துப்பாக்கி வேட்டுச்சத்தம் - சி ரெட் வாங்கிச் சென்ற இளைஞன் இர வெள்ளத்தில் கிடக்கிறான்.

இவை இந்தி சினிமாக் காட்சி அல்ல; ஜூன் 11ம் தேதியன்று நடை சம்பவங்கள்.

மத்திய பம்பாயில் உள்ள நாயர் ம துவமனையில் பட்டப் பகலில் கொல் பட்ட 35 வயது இளைஞன் கனி அரசா நாணயச்சாலை ஊழியன். 'பி.ஐ.டி. எனும் சேரிப்பகுதியைச் சேர்ந்த ஹே ஹதே என்ற ரவுடியின் தலைமையி கும்பலைச் சேர்ந்தவன். ஏற்கனவே கொலை வழக்குகளில் குற்றம் சா பட்டு. தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் செய்யப்பட்டு ஜாமீனில் வெளியே ருப்பவன். வேறு சில கொலைகளு போலீசால் 'தேடப்பட்டு' வரு 'பி.ஐ.டி.. சால்' பேட்டையைத் தனது கத்தின் கீழ் கொண்டுவர முயலும் கா லாத் என்ற இன்னொரு ரவுடியின் ஆ தான் இந்தக் கொலையைச் செய்தவ

தாதர் பகுதியில் கொலை செ பட்ட பாட்டீல் என்ற 25 வயது இளை பம்பாயின் பிரபல குண்டர் படை வன் அமர் நாயக்கிற்கு நெருக்கமா இவனுடைய கொலைக்கும் காரணம் யாக் குண்டர் படைகளிடையே பேட்டை ஆதிக்கப்' போட்டிதான்.

• ○ •

பம்பாயின் மேட்டுக்குடி யான ஜுஹு கடற்கரைப் பகுதிக்கு றுவிட்டு ஜூன்-26-ம் தேதி இரவு வில் திரும்பிக் கொண்டிருந்த கன